2023 ஏப்ரல் 1]

சிறுபான்மையினர் நலத் துறையின்மூலம் தரப்படும் scooter *பெறுவதற்கான வயது வரம்பு நீட்டித்துத் தரப்படுமா? மேலும் சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு அரணாக இருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இமாம்களுக்கு ரூ.3,000/– ஓய்வூதியத்தை வழங்கிக்கொண்டிருக்கிறார். அரசின் நிதி நிலைமைக்கேற்ப அது உயர்த்தித் தரப்படுமா எனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை முழுவதும் ஏற்றுக்கொள்ளக்கூடியது.* Scooter *மானியத்தோடு வழங்குவதற்கான நிதியினை ஒதுக்கி அளித்துள்ளோம். யார், யார் அதற்கு முன்வருகிறார்களோ அவர்களுக்கு அளித்து வருகிறோம். வயது வரம்பையும் இப்போது தளர்த்தி வழங்குவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும், குளம் சீரமைக்கின்ற பணியும் அங்கே இருக்கின்ற பணியாளர்களுக்கு வீடு கட்டுகின்ற பணியும் தற்போது பரிசீலனையில் உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 100, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) தனி கேள்வி போடுங்கள், பதில் தர சொல்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மைக் கொடுங்கள்.*

100—

உண்டி உறைவிடப் பள்ளி

***46460—திரு. இரா. அருள்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏற்காடு வெள்ளக்கடை ஊராட்சிப் பகுதியில் ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளியைத் துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சேலம் மாவட்டம், ஏற்காடு ஒன்றியத்தில், ஏற்கெனவே ஒரு ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளி 21-6-2019 அன்று துவங்கப்பட்டு, நாகலூர் அரசு உயர்நிலைப் பள்ளி வளாகத்தில், தற்காலிகமாகச் செயல்பட்டு வருகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரும் ஏற்காடு வெள்ளக்கடை ஊராட்சிப் பகுதியில் ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளி துவங்க சாத்தியக்கூறு இல்லை. மேலும், இந்தப் பள்ளிக்கு ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட நிலமானது சமதளப்பரப்பாக இல்லாததால் வேறு இடம் தேர்வு செய்யப்பட்டு, ஒன்றிய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது. ஒன்றிய அரசு அனுமதியளித்தவுடன், நிதியுதவியைப் பெற்று, கூடியவிரைவில் பள்ளிக் கட்டடம் கட்டப்படும்.

முற்பகல் 11–10

மேலும், சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே அபினவம் என்ற இடத்திலுள்ள ஓர் ஏகலைவா உண்டி உறைவிடப் பள்ளியில் சுமார் 480 மாணவ, மாணவிகள் பயின்று வருகிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள் அவர்கள்.*

திரு. இரா. அருள்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வெள்ளக்கடைக்குப் பதிலாக புதிய இடத்தில் பள்ளிக்கூடம் கட்டப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குரிய இடத்தை விரைந்து தேர்வு செய்து, கட்டடத்தைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

சேலம் மாவட்டத்தில் மொத்தம் 42 ஆதி திராவிட மாணவ, மாணவியர் விடுதிகள் இருக்கின்றன. அவற்றில் 1,062

2023 ஏப்ரல் 1]

மாணவர்களும், 438 மாணவிகளும் கல்வி பயின்று வருகிறார்கள். அந்த விடுதிகளெல்லாம் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. அதற்காக உடனடியாக நிதியொதுக்கி, புதுப்பித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, சேலம், மரவனேரியில் இருக்கிற அம்பேத்கர் மாணவர் விடுதி மிகப் பழமையான விடுதி. அதனையும் உடனடியாகப் புதுப்பித்துத் தர வேண்டும்.

சேலம் மேற்கு தொகுதியிலுள்ள கே.ஆர். தோப்பூரில் ஒரு மாணவர் விடுதி இருக்கிறது. 50 மாணவர்கள் தங்கிப் படிக்கும் வசதியுள்ள அந்த விடுதியில் எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இல்லாததால், வெறும் 21 மாணவர்கள் மட்டும் படிக்கிறார்கள். அதுபோல, ஓமலூர், கருப்பூர் ஆகிய பகுதிகளிலும் இதே நிலைதான் இருக்கிறது. சேலம் மாவட்டத்திலுள்ள அந்த மாணவர் விடுதிக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நிதியொதுக்கி, பழுதுபார்த்துத் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தில் உள்ள 13 மாணவியர் விடுதிகளில் இரவுக் காவலர்கள் இல்லாமலிருப்பதால், மாணவிகளுக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாக இருக்கிறது. ஆகவே, அதனையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தலைமையிலான இவ்வரசு பொறுப்பேற்றவுடன், மிகவும் பழுதடைந்த நிலையிலிருந்த ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையைச் சார்ந்த விடுதிகளைப் பராமரிப்பதற்காக ரூ.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதன் விளைவாக, தமிழ்நாடு முழுவதும் உள்ள 366 விடுதிகளில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

சேலம் மாவட்டத்தில் 42 விடுதிகள் இருந்தாலும், முதல் கட்டமாக, 11 விடுதிகளில் இந்தப் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

குறிப்பிட்ட மீதமுள்ள விடுதிகள் தொடர்பான கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று இந்த நிதியாண்டிலேயே அதற்கான பழுதுபார்ப்புப் பணிகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மரவனேரி விடுதிக்குப் புதிய கட்டடம் கட்டுவதற்காக சென்ற நிதியாண்டில் சுமார் ரூ.7.50 கோடி நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அந்த நிதி போதவில்லை என்று TAHDCO *கோரியுள்ளதால், கூடுதலாக ரூ.3 கோடி நிதியொதுக்கீடு செய்வதற்கான கருத்துரு அரசுக்கு வரப்பெற்றுள்ளதையடுத்து, கூடியவிரைவில் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் தொடங்கப்படும்.*

மேலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடனான மண்டல ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டபோது, இக்கட்டடம் மிகவும் பழமையான கட்டடம் என்றும், 250 மாணவர்கள் அங்கு தங்கியிருக்கிறார்கள் என்றும், அவர்களை வேறு இடத்திற்கு மாற்றம் செய்யவேண்டிய சூழ்நிலையும் உள்ளது என்றும், அதற்காக சில விடுதிகளைத் தேர்வு செய்ய வேண்டுமென்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் குறிப்பிட்டு, அனுமதி கேட்டிருக்கிறோம். ஆகவே, கூடியவிரைவில் மரவனேரி விடுதியும் கட்டப்படும்.

அதைப்போல, இரவுக் காவலர்கள் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருந்தார்கள். இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, கூடியவிரைவில் அனைத்துப் பணியிடங்களும் நிரப்பப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள் அவர்கள்.*

திரு. இரா. அருள்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம், மரவனேரியில் இருக்கிற விடுதிக்கு ஒதுக்கப்பட்ட ரூ.7.50 கோடி நிதி போதவில்லை என்பதால், கூடுதலாக நிதியொதுக்கம் செய்யப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பதற்கு என்னுடைய மட்டற்ற மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த விடுதி, மிகவும் பாரம்பரியமான விடுதி. நாங்கள் பள்ளி, கல்லூரியில் படிக்கும்போது, அந்த*

2023 ஏப்ரல் 1]

விடுதியில் இரவு நேரங்களில் நிறைய நாட்கள் தங்கியிருக்கிறோம். அந்த விடுதியின் முகப்பில், 'நான் கற்ற கல்வி என் சமூகத்திற்குப் பயன்படாவிட்டால், என்னை நானே சுட்டுக்கொள்வேன்' என்ற அம்பேத்கர் அவர்களின் அருமையான, அற்புதமான, வைர வரிகள் வாசகமாக எழுதப்பட்டிருக்கும். அவற்றையெல்லாம் பார்த்துப் பார்த்து வளர்ந்தவர்கள் நாங்கள். அதனால்தான் அனைவரிடமும் சகோதரத்துவத்துடன் வாழ வேண்டுமென்று எண்ணுகிறோம். அந்தத் துறை சார்ந்த விடுதிகளிலுள்ள சமையலருக்கு பணி வரன்முறை வழங்கப்படவில்லை. அதேபோல, சேலத்தில் பகடுப்பட்டு, தேக்கம்பட்டு, செம்மநத்தம், ராமன்பட்டி உள்ளிட்ட 11 பழங்குடியினர் விடுதிகள் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும், கேள்வியை முடியுங்கள்.*

திரு. இரா. அருள்: *இந்த 11 விடுதிகளில்—ஒரே வளாகத்தில் துவக்கப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி ஆகிய மூன்றும் இருக்கின்றன. அவற்றிலுள்ள துவக்கப் பள்ளி மாணவர்களுக்கு விடுதி இல்லாததால், உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளியில் இருக்கிற மாணவர்கள் சாப்பிடுவதைத் துவக்கப் பள்ளி மாணவர்கள் வேடிக்கை பார்க்கின்ற ஒரு நிலையிருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல் தமிழகம் முழுதும் பல விடுதிகளில் வார்டன்கள் அங்கு தங்குவதில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும். கேள்விக்கு வாருங்கள்.*

திரு. இரா. அருள்: *அங்கு வழங்கப்படும் உணவின் தரத்தையும் நல்ல விதமாக மேம்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டு, நன்றி கூறி, அமர்கிறேன்.*

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, கவனத்தில் கொள்ளப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்ற பிறகு, கூடியவிரைவில் சமையலர்கள் பணியிடங்கள் நிரப்பப்படும்.*

உண்டி உறைவிடப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், ஆரம்பப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் பெரும்பாலும் அங்கு தங்குவதில்லை. அவர்களது வீடுகள் அருகாமையில் இருப்பதால் வீட்டிற்குச் சென்று விடுகின்றனர். நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள்தான் அவ்விடுதிகளில் தங்கிப் பயில்கின்றனர். கிட்டத்தட்ட 48 விடுதிகள் தனியாக இருக்கின்றன. கிட்டத்தட்ட 320 பள்ளிகள் இருக்கின்றன. தற்போது பள்ளிக் கல்வித் துறையுடன் இந்தப் பள்ளிகள் இணைக்கப்பட்டதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தனியாக விடுதிகள் துவங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு

காவிரி-வைகை-குண்டாறு இணைப்பு, திட்டப் பணிகளை விரைவுபடுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், சொல்கிறேன், மாண்புமிகு உறுப்பினர்கள் எதிர்க்கட்சித் தலைவர், திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள், டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள், (குறுக்கீடுகள்) திரு. கே.பி. முனுசாமி அவர்கள், திரு. வி.வி. ராஜன் செல்லப்பா அவர்கள், திரு. M. ராஜமுத்து அவர்கள், திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன் அவர்கள் மற்றும் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஆகியோர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். இவர்களில் யாரேனும் ஒருவர் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரவும். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.